Ours bank with
Bank of Baroda


# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்




New College House (A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.


| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 80 | உள்ளூர் - 21.03.2026 | சனி | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 55 | * Issue 80 | வெளியூர் - 22.03.2026 | ஞாயிறு | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |


தவறவிடக்கூடாத 3 முக்கிய அரசு வேலைவாய்ப்புகள்!

ரேஷன் அட்டை: ஏப். முதல் புதிய முறை...!

அனல் பறக்கும் தேர்தல் கள செய்திகள்!

புதிய அவதாரம் எடுக்கும் அஜித்!

## தமிழ்நாட்டில், தொகுதி வாரியாக

# இவிஎம், விவிபாட் இயந்திரங்கள் பிரிக்கும் பணி...!

## மார்ச் 23-ல் தொடக்கம்!!





சென்னை, மார்ச். 21–

தமிழ்நாட்டில், இவிஎம், விவிபாட் வாக்குப்பதிவு இயந்திரங்களை இணைய குலுக்கல் முறையில் தொகுதி வாரியாக பிரிக்கும் பணி வரும் மார்ச் 23–ம் தேதி தொடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்ட செய்திக்குறிப்பில் , தமிழகத்தில் வரவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலில் பயன்படுத்த வேண்டிய மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVM) மற்றும் வாக்காளர் தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் கருவிகளின் (VVPAT) மாவட்ட அளவில் இருந்து தொகுதி வாரியாக இணைய குலுக்கல் முறையில் பிரிக்கும் பணி, அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் வரும் மார்ச் 23–ம் தேதி தொடர்புடைய மாவட்ட தேர்தல் அலுவலரால் மேற்கொள்ளப்படும்.

இப்பணி நிறைவடைந்த பின்னர், தொகுதி வாரியாக ஒதுக்கீடு செய்யப்பட்ட இவிஎம், விவிபாட் இயந்திரங்கள் பட்டியல்கள் மாவட்ட தலைமையிடங்களிலுள்ள அங்கீகரிக் கப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகளுடன் பகிரப்படும்.

இந்த இயந்திரங்கள், தேர்தலில் பயன்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு வழங்கப்படும்.

அவை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அந்தந்த சட்டப்பேரவை தொகுதி காப்பறையில் பாதுகாப்பாக வைக்கப்படும்.


தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலை இறுதி செய்த பின்னர், அந்த இயந்திரங்கள் பட்டியல் தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களுடனும் பகிரப்படும். அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர், தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு வாக்குச்சாவடி தலைமை அலுவலர் கைபேசி செயலி பயன்படுத்துதல் பற்றிய பயிற்சி காணொலி வழியாக நேற்று வழங்கப்பட்டது.

இந்த கைபேசி செயலியின் மூலம், வாக்குப்பதிவு நாளில் ஒவ்வொரு 2 மணி நேரத்துக்கும் வாக்குப்பதிவு நிலவரங்களை வாக்குச்சாவடி தலைமை அலுவலர் பதிவு செய்வதற்கான வசதிகள் உள்ளது.

தேர்தல் நாளன்றும் மற்றும் தேர்தல் நாளுக்கு ஒரு நாள் முன்னதாகவும், எந்தவொரு அரசியல் கட்சியோ, வேட்பாளரோ அல்லது வேறு எந்த அமைப்போ அல்லது நபரோ, மாநில, மாவட்ட அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவிடம் உள்ளடக்கத்தை முன்–சான்றொப்பம் பெறாமல், அச்சு ஊடகங்களில் எந்தவொரு அரசியல் விளம்பரத்தையும் வெளியிடக்கூடாது. மாநிலத்தில் புழக்கத்தில் உள்ள அச்சு ஊடகங்களில், ஏப்.22, 23 தேதிகளில் அரசியல் விளம்பரங்கள் வெளியிடக்கூடாது.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.


## ஆர்.எஸ்.எஸ்-ல் அதிரடி மாற்றம்!



புதுடெல்லி, மார்ச். 21–

ஒரே நாடு ,ஒரே தலைவர் என்ற சிந்தனையுடன் செயல் பட்டு வரும் இந்த இயக்கம். தற்போது இந்தியாவை 45மாநிலங்களாக, 80 கோட்டமாக இயங்கி வந்த நிலையில், தற்போது அமைப்பு ரிதியாக பெரும் அதிரடி மாற்றங்களை செய்துள்ளது. இந்தியாவை தற்போது 6 பிரதேசங்களாக பிரித்துள்ளது. தமிழகத்தில் 6கோட்டங் களை உருவாக்கியுள்ளது .

## வளைகுடா பகுதிக்கு 2,500 கடற்படை வீரர்களுடன் 3 போர்க்கப்பல்களை அனுப்புகிறது அமெரிக்கா!



அமெரிக்கா, மார்ச். 21–


அமெரிக்க ராணுவம் மத்திய கிழக்கு பிராந்தியத்திற்கு மேலும் மூன்று போர்க்கப்பல்களையும், சுமார் 2,500 கடற்படை வீரர்களையும் அனுப்பி வைப்பதாக ஓர் அதிகாரி தெரிவித்துள்ளார். யுஎஸ்எஸ் பாக்சர் போர்க்கப்பல் மற்றும் இரண்டு நீர்–நிலத் தாக்குதல் கப்பல்கள் ஆகியவற்றுடன், 11–வது கடற்படைப் பயணப் பிரிவைச் சேர்ந்த சுமார் 2,500 வீரர்கள் சான்டியாகோவிலிருந்து மத்திய கிழக்கு நோக்கிப் புறப்பட்டுள்ளனர். இந்த கப்பல்கள் மத்திய கிழக்கில் எந்த இடத்திற்குச் செல்கின்றன என்பதை அவர்கள் குறிப்பிடவில்லை.

## தமிழ்நாட்டில் சட்டமன்ற தேர்தலை நிறுத்தி வைக்கக்கோரி உச்சநீதிமன்றத்தில் மனு..!

புதுடெல்லி, மார்ச். 21–

தமிழ்நாட்டில் சட்டமன்ற தேர்தலை நிறுத்தி வைக்கக்கோரி மதுரையை சேர்ந்தவர் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.. தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு மோசமாக இருப்பதால் தேர்தலை நிறுத்தி வைக்க வேண்டும் என மதுரை சமூக ஆர்வலர் ரமேஷ் மனு தாக்கல் செய்துள்ளார். இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## போர் அவசரம்: செல்லப்பிராணிகளுடன் இந்தியா திரும்ப அனுமதி!





புதுடெல்லி, மார்ச். 21–

போரால் பாதிக்கப்பட்ட மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து இந்தியா திரும்புபவர்கள் தங்கள் செல்லப்பிராணிகளை கொண்டு வர மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியம் (CBIC) ஒருமுறை சலுகை (one–time relaxation) அறிவித்துள்ளது.

முக்கிய அம்சங்கள்:

மத்திய கிழக்கில் சிக்கித் தவிக்கும் இந்தியர்கள், தங்கள் நாய் மற்றும் பூனைகளை இந்தியாவுக்கு கொண்டு வர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சாதாரணமாக தேவையான export விதிமுறைகள் (pre–export formalities) இந்த அவசர சூழலில் இல்லாவிட்டாலும் அனுமதி வழங்கப்படும்.

இதற்கான வழிகாட்டுதலை கால்நடை வளர்ப்பு மற்றும் பால்வளத் துறை (DAHD) வெளியிட்டுள்ளது.

விதிமுறைகள்:

அந்த செல்லப்பிராணி குறைந்தது ஒரு மாதம் உரிமையாளருடன் இருந்திருக்க வேண்டும்

தடுப்பூசி சான்றுகள் (pet passport / vaccination certificate போன்றவை) இருப்பின் அதைக் காண்பிக்க வேண்டும்.

தடுப்பூசி பதிவு இல்லாவிட்டாலும், இந்தியா வந்ததும் மருத்துவ பரிசோதனை

நாய்க்காய்ச்சல் (rabies) தடுப்பூசி போடப்பட்டு அனுமதி வழங்கப்படும்

இறுதி அனுமதி:

விலங்கு தனிமைப்படுத்தல் மற்றும் சான்றிதழ் சேவைகள் (AQCS) மூலம் இறுதி அனுமதி வழங்கப்படும்

## ஆபத்தில் உலகின் முக்கிய டூரிஸ்ட் ஸ்பாட்கள்: ஏவுகணை ஏவப்போவதாக ஈரான் மிரட்டல்!



ஈரான், மார்ச். 21–

ஈரானின் மீது அமெரிக்கா – இஸ்ரேல் 3 வாரங்களுக்கு மேல் தாக்குதல் நடத்தி வருகிறது. பதிலுக்கு ஈரானும் இஸ்ரேல் மற்றும் அமெரிக்க தளங்கள் உள்ள வளைகுடா நாடுகள் மீது தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த தாக்குதலால் உலக அளவில் கேஸ் மற்றும் கச்சா எண்ணெய் விலை அதிகரித்துள்ளது. இந்த போர் எப்போது முடிவுக்கு வரும் என்று உலக நாடுகள் எதிர்பார்த்து கொண்டிருக்கிறது. இதுவரை இஸ்ரேல் – அமெரிக்கா பக்கம் இருந்த ஈரானின் பார்வை தற்போது உலக நாடுகள் மீது திரும்பியுள்ளது. அதாவது, உலகெங்கிலும் உள்ள பொழுதுபோக்கு மற்றும் சுற்றுலாத் தலங்களைத் தாக்குவோம் என ஈரான் அச்சுறுத்தியதுடன், ஏவுகணைகளைத் தொடர்ந்து தயாரித்து வருவதாகவும் தெரிவித்துள்ளது. ஈரானின் இந்த அச்சுறுத்தல் மேற்கு ஆசியாவிற்கு அப்பால் தீவிரவாத தாக்குதல்களை அந்நாடு தொடரக்கூடும் என்ற கவலையை ஏற்படுத்தியுள்ளது.

## இந்தியாவில் எரிவாயு சப்ளையில் தாக்கம்; 5 ஆண்டுகள் வரை தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு!





புதுடில்லி, மார்ச். 21–

மத்திய கிழக்கு நாடுகளின் போர்ச்சூழல், இந்தியா உள்ளிட்ட பல நாடுகளின் எரிவாயு சந்தையை பாதிக்கும் வாய்ப்பு உள்ளதாக தெரியவந்துள்ளது.

'கத்தார் எனர்ஜி' நிறுவனத்தின் கணிப்பில் கூறியிருப்பதாவது: கத்தார் நாட்டின் எரிவாயு உற்பத்தி அமைப்புகள் மீது அண்மையில் ஈரான் தாக்குதல் நடத்தியது. இதன் விளைவாக, கத்தாரின் ஏற்றுமதி திறன் 17 சதவீதம் அளவுக்கு பாதிப்பை சந்தித்துள்ளது. இதனால், எரிவாயு வினியோகம், 3 – 5 ஆண்டுகளுக்கு பாதிக்கப்படும் என்று கணிக்கப்பட்டுள்ளது. ஆண்டுக்கு 1.28 கோடி டன் வரை உற்பத்தி முடங்கக்கூடும். இது, ஆண்டுக்கு 1,700 கோடி கன மீட்டர் அளவுக்கு நிகரானது. இது, ஆசியா, ஐரோப்பிய நாடுகளில் எதிரொலிக்கும்.

தற்போதைய பாதிப்பை அடுத்து, 'போர்ஸ் மெஜர்' எனும் அவசரகால அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது. அதன்படி, கத்தாருடன் நீண்ட கால கொள்முதல் செய்த நாடுகளுக்கு, ஒப்புக்கொள்ளப்பட்ட அளவுக்கு பதிலாக, சாத்தியமுள்ள அளவே சரக்கு அனுப்பப்படும். இன்றைய சூழ்நிலை தற்காலிகமானதாக அல்லாமல், அடிப்படை கட்டமைப்பில் ஏற்பட்ட விரிசலாகவே பார்க்கப்படுகிறது. இவ்வாறு கூறப்பட்டு உள்ளது.

உலகின் மிக நம்பகமான இயற்கை எரிவாயு வினியோக நாடாக கத்தார் பார்க்கப்படுகிறது. அதன் வினியோக அளவு குறையும்போது இந்தியா உள்ளிட்ட நேரடி ஒப்பந்த நாடுகள் உடனடியாக பாதிக்கப்படும். குறிப்பாக ஆசியா மற்றும் ஐரோப்பாவில் எரிவாயு விலை உயரும். நேரடி ஒப்பந்தம் செய்யாத நாடுகளும் பாதிப்புக்கு உள்ளாகும்.

குறுகிய காலத்தில் ஒட்டுமொத்த எரிவாயு அளவுக்கும் மாற்று வழியை கண்டுபிடிக்க முடியாது என்பதால், கட்டமைப்பின் அடிப்படையில் இந்தியா பலவீனமாக இல்லை என்றாலும் நேரடி பாதிப்பு கணிசமான அளவில் ஏற்படும் என்கின்றனர் வல்லுநர்கள்.

**ஆப்ரிக்காவில் எண்ணெய் வாங்கும் முயற்சியில் ஐ.ஓ.சி.,**

பொதுத்துறை நிறுவனமான இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், மேற்கு ஆப்ரிக்காவிலிருந்து கச்சா எண்ணெய் வாங்க திட்டமிட்டு வருகிறது. ஏப்ரல் மாதத்தின் இரண்டாவது பாதியில் கிடைக்கும் வகையில், மேற்கு ஆப்ரிக்கா அல்லது வடக்கு கடற்பகுதி நாடுகளில் இருந்து கச்சா எண்ணெய் வாங்க டெண்டர் கோரப்பட்டுள்ளது. தவிர, மே 6 – 15க்குள் கிடைக்கும் வகையில் ஆசியா பசிபிக் பகுதியிலிருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## போர் விமானங்களைத் தரை இறக்கக் கூடாது: அமெரிக்காவின் கோரிக்கையை நிராகரித்த இலங்கை!




ஸ்ரீலங்கா, மார்ச். 21–

மார்ச் மாத தொடக்கத்தில், நாட்டின் தென்கிழக்கில் உள்ள மத்தல சர்வதேச விமான நிலையத்தில் அமெரிக்காவின் 2 போர் விமானங்கள் தரையிறங்குவதற்கு இலங்கை அனுமதி மறுத்துவிட்டதாக அதிபர் அநுர குமார திஸாநாயக்க வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

ஜிபூட்டியிலிருந்து 2 அமெரிக்க போர் விமானங்கள் மார்ச் 4 மற்றும் 8 ஆகிய தேதிகளில் இலங்கைக்கு வர அனுமதி கேட்டதாகவும் அந்த இரண்டு கோரிக்கைகளும் நிராகரிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

## கையிருப்பில் கூடுதல் கச்சா எண்ணெய் இல்லை... அமெரிக்காவின் சலுகையை நிராகரித்த ஈரான்!



ஈரான், மார்ச். 21–

மத்திய கிழக்கில் போர் உச்சக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில், உலகின் மிக முக்கியமான கடல்வழிப் பாதையான ஹார்முஸ் ஜலசந்தி வழியாக செல்லும் கப்பல்களை ஈரான் தாக்கி வருகிறது. இதனால் வழித்தடத்தில் கப்பல் போக்குவரத்து வெகுவாக குறைந்துள்ளது.

அதே சமயம் கத்தார், சவூதி அரேபியா நாடுகளில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதனால் சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

கச்சா எண்ணெயை விலை உயர்வை கட்டுப்படுத்த, கடலில் முடங்கியுள்ள ஈரானிய எண்ணெய் மீதான தடைகளை 30 நாட்களுக்கு நீக்குவதாக அமெரிக்கா அறிவித்தது.

இந்நிலையில், சர்வதேச சந்தைக்குக் கூடுதல் கச்சா எண்ணெயை வழங்குவதற்குத் தங்களிடம் கையிருப்பு ஏதுமில்லை என ஈரான் அரசு திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

ஈரானிய எண்ணெய் மீதான தடைகளை நீக்குவதாக அமெரிக்கா அறிவித்த நிலையில், ஈரான் அரசு அச்சலுகையை நிராகரித்துள்ளது

தலையங்கம்

மதுரை மணி

சனிக்கிழமை 21.03.2026
விசுவாவசு தமிழ் வருடம்
பங்குனி மாதம் 07-ம் தேதி

## இந்திய பங்குச்சந்தை முதலீட்டாளர்கள் கவனத்திற்கு..!



ஈரான்–கத்தார் பதற்றத்தால் கச்சா எண்ணெய் விலை $114–ஐத் தொட்டது, HDFC வங்கித் தலைவரின் ராஜினாமா மற்றும் அமெரிக்க வட்டி விகிதங்கள் மாற்றமில்லாதது போன்ற காரணங்களால் ( 20.03,2026)இந்தியச் சந்தை கடும் சரிவைச் சந்தித்துள்ளது. இந்திய பங்குச்சந்தை வர்த்தக நேரத்தின் போது கணிசமான சரிவைச் சந்தித்துள்ளது. உலகளாவிய பதற்றங்கள் மற்றும் உள்நாட்டு வங்கித்துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் என பல காரணங்கள் இந்த வீழ்ச்சிக்குப் பின்னால் உள்ளன. மார்க்கெட் வீழ்ச்சிக்கான ((Market Crash) நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய 5 முக்கிய காரணங்கள்?

**1. கச்சா எண்ணெய் விலை உயர்வு**

மார்க்கெட் வீழ்ச்சிக்கான மிக முக்கியமான காரணம் ப்ரெண்ட் கச்சா எண்ணெய் விலை (Brent Crude Oil Prices) பேரலுக்கு $114 ஆக உயர்ந்ததுதான். ஈரான் தனது அண்டை நாடுகளான கத்தார், யுஏஇ (UAE), சவுதி அரேபியா மற்றும் பஹ்ரைன் ஆகியவற்றின் எரிசக்தி நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தப்போவதாக எச்சரித்துள்ளது. சில இடங்களில் தாக்குதல்களும் நடந்துள்ளன. உதாரணமாக, கத்தாரின் 'ரஸ் லாஃபான்' (Ras Laffan) என்ற எல்என்ஜி (LNG) செயலாக்க ஆலை மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனால் கடுமையான சேதம் ஏற்பட்டுள்ளதாக கத்தார் தெரிவித்துள்ளது. யுஏஇ–யின் பல ஆலைகள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. அவை முறியடிக்கப்பட்டன. ஆனால் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கப் படைகள் இப்பகுதியை விட்டு வெளியேறாவிட்டால், தொடர்ந்து தாக்குதல் நடத்துவோம் என ஈரான் கூறியுள்ளது. இந்த நிச்சயமற்ற தன்மையால் கச்சா எண்ணெய் விலை மீண்டும் உயர்ந்துள்ளது.

**2. உலகளாவிய சந்தைகளின் சரிவு:**

கச்சா எண்ணெய் விலை உயர்வால் உலகெங்கிலும் உள்ள சந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதன் தாக்கம் இந்திய சந்தைகளிலும் எதிரொலிக்கிறது. ஜப்பான் மற்றும் கொரிய சந்தைகளாக இருந்தாலும் சரி, அல்லது நேற்றைய அமெரிக்க சந்தையாக இருந்தாலும் சரி, அனைத்துமே சரிவைச் சந்தித்தன. இந்த போர் பதற்றம் அனைத்து நாட்டு முதலீட்டாளர்களையும் அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது. இந்த உலகளாவிய விற்பனை அழுத்தம் (Global Sell–off) இந்திய சந்தையிலும் ஒரு தொடர் விளைவை (Cascading effect) ஏற்படுத்தியுள்ளது.

**3. HDFC வங்கியின் தலைமை மாற்றம்:**

இந்தியாவின் மிகப்பெரிய தனியார் வங்கியான HDFC பார்ட்–டைம் சேர்மன் அதானு சக்ரவர்த்தி தனது பதவியை திடீரென ராஜினாமா செய்துள்ளார். அவரது ராஜினாமா கடிதத்தில், "எனது மதிப்புகள் மற்றும் நெறிமுறைகளுடன் ஒத்துப்போகாத விஷயங்கள் வங்கியில் நடக்கின்றன" என்று குறிப்பிட்டிருந்தது குழப்பத்தை ஏற்படுத்தியது. பின்னர் அவர் அப்படி எதுவும் தவறாக நடக்கவில்லை என்று விளக்கம் அளித்தார். இது ஒரு கார்ப்பரேட் அரசியலாக இருக்கலாம் என்று கருதப்பட்டாலும், நாட்டின் இரண்டாவது பெரிய கடன் வழங்கும் வங்கியின் தலைவர் விலகியது எதிர்மறையான செய்தியாக அமைந்தது. உடனடியாக கே. மிஸ்திரி (K. Mistry) நியமிக்கப்பட்டதும், ரிசர்வ் வங்கி (RBI) இதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று கூறியதும் சந்தைக்கு சற்று ஆறுதல் அளித்தது. இதனால் 8% சரிந்த பங்குகள் சற்று மீண்டன. அதேநேரம் ஒரு பெரிய பங்கின் வீழ்ச்சி சந்தையை ஒட்டுமொத்தமாக பாதித்தது.

**4. அமெரிக்க ஃபெடரல் ரிசர்வ் முடிவு :**

அமெரிக்க ஃபெடரல் ரிசர்வ் தலைவர் ஜெரோம் பவல், வட்டி விகிதங்களில் மாற்றமில்லை என்று அறிவித்துள்ளார். பணவீக்கம் இன்னும் குறையவில்லை என்றும், மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் அரசியல் பதற்றங்கள் மற்றும் டொனால்ட் ட்ரம்ப்பின் வரிக் கொள்கைகள் (Tariff flip–flops) போன்ற நிச்சயமற்ற தன்மைகளே இதற்குக் காரணம் என்றும் அவர் கூறியுள்ளார். வட்டி விகிதங்கள் 3.5% முதல் 3.75% வரை நீடிக்கும் என்றும், இந்த ஆண்டு வட்டி விகிதக் குறைப்பு மிகக் குறைவாகவே இருக்கும் என்றும் அவர் கூறியது, 'வட்டி குறையும்' என எதிர்பார்த்து இருந்த மார்க்கெட்டுக்கு ஒரு பெரிய அடி விழுந்தது.

**5. அமெரிக்க பாண்ட் ஈல்ட் உயர்வு :**

ஃபெடரல் ரிசர்வ் முடிவைத் தொடர்ந்து, அமெரிக்காவின் 10 ஆண்டுகால பாண்ட் ஈல்ட் (Bond Yield) 4.2% லிருந்து 4.28% ஆக உயர்ந்துள்ளது. குறுகிய கால 2 ஆண்டுகால பாண்ட் ஈல்டு சுமார் 10–11 புள்ளிகள் அதிகரித்துள்ளது. இது வெளிநாட்டு நிறுவன முதலீட்டாளர்களின் விற்பனை தொடரக் காரணமாகியுள்ளது.

**முதலீட்டாளர்கள் என்ன செய்ய வேண்டும்?**

தற்போது போர் காரணமாக எங்கு பார்த்தாலும் எதிர்மறையான செய்திகளே வருகின்றன. இது கடந்த கால சந்தை வீழ்ச்சிகளை நினைவூட்டுகிறது. கடந்த 18–19 மாதங்களாக சந்தையில் பெரிய வருமானம் இல்லை. இப்போது விலையிலும் சரிவு (Price correction) ஏற்பட்டுள்ளது. இத்தகைய சூழலில் பதற்றமடையாமல் நிதித் திட்டமிடலைப் (Financial Planning) பின்பற்றுவதே சிறந்தது.

## ரேஷன் அட்டைதாரர்களுக்கு குட்நியூஸ்..! ஏப்ரல் முதல் புதிய நடைமுறை அமல்...!



சென்னை, மார்ச். 21–

வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள அனைத்து மக்களுக்கும் அரசாங்கம் இலவச ரேஷன் வழங்கி வருகிறது. இருப்பினும், ஏப்ரல் மாதத்தில் நாடு முழுவதும் உள்ள அனைத்து ரேஷன் அட்டைதாரர்களுக்கும் 3 மடங்கு ரேஷன் வழங்கப்படும் என்று மத்தியிலுள்ள நரேந்திர மோடி அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பை மத்திய அரசின் உணவு மற்றும் பொது விநியோகத் துறை வெளியிட்டது.

'X' சமூக ஊடகத் தளத்தில் அவர் எழுதிய பதிவில், அனைத்து பயனாளிகளும் ஏப்ரல் மாதத்தில் 3 மாதங்களுக்கான ரேஷனை ஒரே நேரத்தில் பெற்றுக்கொள்வார்கள் என்று குறிப்பிட்டுள்ளார். இதற்காக, அனைத்து பயனாளிகளும் தங்களுக்கு அருகிலுள்ள ரேஷன் கடையில், குறிப்பிட்ட நேரத்தில் சென்று ரேஷனைப் பெற்றுக்கொள்ளலாம்.

இருப்பினும், கடந்த காலங்களிலும் இதேபோன்று 3 மாதங்களுக்கான அரிசி ஒரே நேரத்தில் விநியோகிக்கப்பட்டுள்ளது. கோடைக்காலத்தில் உணவுப் பற்றாக்குறை ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்காகவே அரசாங்கம் இத்தகைய முடிவை எடுக்கிறது என்பதே இதற்கான காரணமாகும்.

2025–ஆம் ஆண்டில், தகுதியற்ற நிலையில் இருந்த 41.41 லட்சம் ரேஷன் அட்டைகள் ரத்து செய்யப்பட்டதாக அரசாங்கம் மத்திய அரசு நாடாளுமன்றத்தில் தெரிவித்தது.

## தமிழ்நாட்டில் 1 - 9ஆம் வகுப்பு மாணவர்களுக்கு \ ஆண்டுத் தேர்வு? வெளியான அட்டவணை!



சென்னை, மார்ச். 21–

தமிழ்நாட்டில் ஏப்ரல் 23ஆம் தேதி சட்டமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், 1 முதல் 9ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ஏப்ரல் 1ஆம் தேதி முதல் 16ஆம் தேதி வரை ஆண்டுத் தேர்வு நடைபெறும் என்று பள்ளிக் கல்வித்துறை தெரிவித்துள்ளது.

**முன்கூட்டியே நடத்தப்படும் தேர்வுகள்**

தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில், அதற்கு சில நாட்கள் முன்னதாக பள்ளிகளை ஒப்படைக்க வேண்டியது அவசியம். இதனால், முன்கூட்டியே தேர்வுகள் நடத்தப்படும் என்று எதிர்பார்ப்பு எழுந்தது. அதே வகையில் முழு ஆண்டுத் தேர்வு அறிவிக்கப்பட்டுள்ளது.

2025–2026 ஆம் கல்வியாண்டிற்கான அரசு/ அரசு உதவி பெறும்/ தனியார் பள்ளிகளுக்கு 1 முதல் 5ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு ஏப்ரல் 6 முதல் 16ஆம் தேதி வரை ஆண்டு இறுதித் தேர்வுகள் உள்ளன. அதேபோல 6 முதல் 9ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு ஏப்ரல் 1ஆம் தேதி முதல் 16ஆம் தேதி வரையிலும் தேர்வுகள் நடைபெற உள்ளதாக பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் கண்ணப்பன் அறிவித்துள்ளார்.

**யார் யாருக்கு எப்போது?**

குறிப்பாக 1, 2, 3ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ஏப்ரல் 8ஆம் தேதி அன்று தமிழ் பாடத் தேர்வு நடைபெற உள்ளது. 13ஆம் தேதி அன்று ஆங்கிலப் பாடமும் 16ஆம் தேதி அன்று கணக்கு பாடத்துக்கான தேர்வும் நடைபெற உள்ளது.

அதேபோல 3, 4, 5ஆம் வகுப்புகளுக்கு ஏப்ரல் 6ஆம் தேதி தமிழ் மொழித் தேர்வும் 8ஆம் தேதி ஆங்கில மொழித் தேர்வும் நடைபெற உள்ளது. ஏப்ரல் 9ஆம் தேதி கணக்கு பாடமும் 13ஆம் தேதி அறிவியல் பாடமும் 16ஆம் தேதி சமூக அறிவியல் பாடத்துக்கான தேர்வும் நடக்க உள்ளன.

அனைத்து வகை தொடக்க/ நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் முதல்வர்களுக்கு இத்தேர்வு கால அட்டவணை குறித்த விவரத்தினை தெரிவிக்குமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் அனைத்து வகை மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு பள்ளிக் கல்வித்துறை அறிவித்துள்ளது.

## மாணவர்களுக்கு டபுள் ஜாக்பாட்.. பள்ளிகளுக்கு விடுமுறை, வெளியான முக்கிய அறிவிப்பு !




சென்னை, மார்ச். 21–


ஏப்ரல் 2026 மாதமானது இந்தியா முழுவதும் உள்ள பள்ளி மாணவர்களுக்கு ஒரு மிக முக்கியமான மாதமாகும்; ஏனெனில் இம்மாதத்தில் பல முக்கிய விடுமுறைகள் மற்றும் பண்டிகைகள் நிழப் போகிறது, பெரும்பாலான பள்ளிகளில் புதிய கல்வி அமர்வின் தொடக்கத்தையும் இது குறிக்கிறது. மார்ச் மாதத்தில் இறுதித் தேர்வுகள் நிறைவடைந்த பிறகு, மாணவர்கள் புதிய வகுப்புடன்,புதியபாட திட்டங்களுடம் வகுப்பிற்குள் அடியெடுத்து வைக்க உள்ளனர்.

அதே வேளையில், மகாவீர் ஜெயந்தி, புனித வெள்ளி மற்றும் அம்பேத்கர் பிறந்த நாள் போன்ற விடுமுறை இருக்கும், இந்த நேரத்தில் மாணவர்களுக்கு தொடர்ந்து ஐந்து நாட்கள் விடுமுறை கிடைக்கூடும். இந்தியாவில், ஏப்ரல் 2026–ஆம் ஆண்டிற்கான எதிர்பார்க்கப்படும் பள்ளி விடுமுறைப் பட்டியலை இங்கே காணலாம். பள்ளி வாரியங்கள் மற்றும் மாநிலங்களைப் பொறுத்து, இவ்விடுமுறைகளில் சிறிய அளவிலான மாற்றங்கள் இருக்கக்கூடும்.

ஏப்ரல் 1, 2026 – பங்குனி உத்திரம் ஏப்ரல் 2, 2026 – மகாவீர் ஜெயந்தி ஏப்ரல் 3, 2026 – புனித வெள்ளி ஏப்ரல் 5, 2026 – ஈஸ்டர் ஏப்ரல் 13, 2026 – வைசாகி ஏப்ரல் 14, 2026 – அம்பேத்கர் ஜெயந்தி ஏப்ரல் 14, 2026 – தமிழ் புத்தாண்டு ஏப்ரல் 15, 2026 – போஹாக் பிஹு, அசாமிய புத்தாண்டு விழா ஏப்ரல் 17, 2026 – சில மாநிலங்களில் கோடைக் கால விடுமுறை தொடங்கும். ஏப்ரல் மாதத்தின் மிக முக்கியமான சிறப்பம்சங்களில் ஒன்று, இந்தியா முழுவதும் உள்ள பள்ளிகளில் புதிய கல்வி அமர்வு (202627) தொடங்குவதாகும்.

இதற்கிடையில், பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு அவ்வப்போது விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, பங்குனி மாதம் என்பதால், கோயில் திருவிழாக்கள் நடைபெறுகிறது. இதனால், குறிப்பிட்ட மாவட்டங்களுக்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டு வருகிறது.

## இந்தியன் வங்கி வாடிக்கையாளர்கள் கவனத்திற்கு... 5 முறைக்கு மேல் ATM பயன்படுத்தினால் கட்டணம்!



சென்னை, மார்ச். 21–

இந்தியன் வங்கி தனது வாடிக்கையாளர்களின் செல்போன் எண்ணுக்கு நேற்று குறுஞ்செய்தியை அனுப்பியது.

அதில், அன்பான வாடிக்கையாளர்களே... மாதம் 5 முறை ஏ.டி.எம்.ல் பண பரிவர்த்தனையை கட்டணம் இல்லாமல் மேற்கொள்ளலாம். அதற்கு மேல் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும் ரூ.17 கட்டணம் மற்றும் ஜி. எஸ்.டி. வரி வசூலிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த புதிய நடைமுறை அடுத்த மாதம் (ஏப்ரல்) 20–ந்தேதி முதல் அமலுக்கு வருகிறது.

## 'ஆர்டருக்கு' இனி கூடுதலாக ரூ.2.40 விலையை உயர்த்தியது 'சொமாட்டோ'!




சென்னை, மார்ச். 21–


உணவு டெலிவரி நிறுவனமான, 'சொமாட்டோ' அதன் பிளாட்பாரம் கட்டணத்தை, கூடுதலாக 2 ரூபாய் 40 பைசா உயர்த்தி அறிவித்துள்ளது.

பிரபல முன்னணி உணவு டெலிவரி நிறுவனமாக, 'சொமாட்டோ' உள்ளது. நாடு முழுதும் ஹோட்டல்களில் இருந்து வாடிக்கையாளர்களுக்கு, நேரடியாக உணவு வழங்கும் பணியை இந்த நிறுவனம் செய்து வருகிறது. இந்நிறுவனம் அடிக்கடி 'பிளாட்பார்ம்' கட்டணம் உள்ளிட்டவற்றை உயர்த்தி வந்தது. நிலையான கட்டண கொள்கை இல்லாமல் இருந்து வந்தது.

முன்பு உணவு டெலிவரி செய்யும்போது, ஜி.எஸ்.டி., இல்லாமல், பிளாட்பார்ம் கட்டணமாக 12 ரூபாய் 50 பைசா வசூலித்து வந்தது. இந்நிலையில் 2 ரூபாய் 40 பைசா, கூடுதல் கட்டணம் வசூலிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி இனி சொமாட்டோவில் உணவு 'ஆர்டர்' செய்யும்போது, பிளாட்பார்ம் கட்டணமாக, 14.90 ரூபாய் கட்டாயமாக வசூலிக்கப்படும். ரேபிடோ நிறுவனம், 'ஒவுன்லி' என்ற செயலியை துவக்கி, கமிஷன் இல்லாத உணவகத்திற்கு முன்னுரிமை என்ற வகையில், சமீப நாட்களாக 'டெலிவரி' செய்து வருகிறது. இதனால் பல உணவகங்கள், அவற்றில் இணைத்து விற்பனை செய்கின்றன. இதன் தாக்கத்தால், சொமாட்டோ நிறுவனம், கூடுதல் கட்டணத்தை உயர்த்தியதாக தகவல் வெளியாகி உள்ளது.



தமிழ்நாடு சட்டமன்றப் பொதுதேர்தல்–2026 முன்னிட்டு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் மனிஷ் நாரணவரே, திருப்பூர் மாவட்டம், பல்லடம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை பார்வையிட்டார்கள். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் க.சங்கமித்திரை. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் உதவி இயக்குநர் (பயிற்சி) செல்வி. ஹர்ஷா, மாவட்ட சமூக நல அலுவலர் ரஞ்சிதாதேவி, மாவட்ட வழங்கல் அலுவலர் சரவனண், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் செ.கு.சதீஸ்குமார் ஆகியோர் உள்ளார்.



## இந்த தேதியில் பிறந்தவர்களுடன் வாக்குவாதம் செய்யாதீர்கள்; நியூமராலஜி சொல்லும் காரணம்!



பிறந்த தேதியின் அடிப்படையில் 1 – 9 வரை ரேடிக்ஸ் எண்கள் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு எண்ணும், தங்களுக்கே உரிய தனித்துவமான குணாதிசயங்களை கொண்டிருக்கும் நிலையில், எந்த தேதியில் பிறந்தவர்கள் (எந்த ரேடிக்ஸ் எண் கொண்டவர்கள்) வலிமையான ஒரு எதிரியாக இருப்பார்? தனது எதிரிக்கு சவால் விடும் விஷயங்களை தைரியமாக செய்வார்? என்பது குறித்து காணலாம்!

**ரேடிக்ஸ் எண் 1**

ஆண்டின் எந்த ஒரு மாதத்திலும் 1, 10, 19, 28 ஆகிய தேதிகளில் பிறந்தவர்கள் எண் 1 பெறுகின்றனர். சூரியனை ஆளும் கிரகமாக கொண்ட இவர்கள், சூரியனின் ஆற்றலுடன் தொடர்புடையவர்கள். ஆற்றல் மிக்கவர்கள், ஆதிக்கம் செலுத்தும் நபர்கள். சூழ்நிலைகளை தங்களுக்கு ஏற்ற வகையில் மாற்றும் ராஜதந்திரிகள், எதிரிகளை எப்படி கையாள்வது என்பது நன்கு அறிந்த சாமர்த்தியசாலிகள்.

சூரியனின் ஆற்றலை கொண்டிருக்கும் இவரக்ள், சுயமரியாதைக்கு முன்னுரிமை அளிப்பவர்கள். அந்த வகையில் தன் உணர்வுகளை புண்படுத்தும் நபர்களுக்கு வலிமையான ஒரு எதிரியாக மாறுகின்றனர். தங்கள் ராஜதந்திரங்கள் மூலம், எதிரிகளின் மன வலிமையை சிதைப்பார்கள்; ஆக்கப்பூர்வமான திட்டங்களை செயல்படுத்துவார்கள்.

ரேடிக்ஸ் எண் 1 கொண்டவர்களின் மனதை யாரேனும் தவறுதலாக காயப்படுத்தினால், அவர்கள் அதனை ஒரு பெரிய விஷயமாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள். அதேநேரம், தெரிந்தே காயப்படுத்தினால், அதனை சாதாரணமாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். தன் மனதை காயப்படுத்தும் அந்த ஒரு நபரின் முதன்மை எதிரியாக அவர்கள் மாறிவிடுவார்கள்.

தைரியத்திற்கு பெயர் பெற்ற இவர்கள், தங்கள் எதிரிகளை பழிதீர்க்க நினைக்கையில் காரியங்களை ரகசியமாக செய்வது இல்லை, வெளிப்படையாக மற்றவர் அறியும் வகையில் தைரியமாக களத்தில் இறங்கி செயல்படுவார்கள். எனவே, இவர்களிடம் சற்று எச்சரிக்கையாகவே இருங்கள்!

**ரேடிக்ஸ் எண் 8**

மாதத்தின் 8, 17, 26 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு ரேடிக்ஸ் எண் 8 வழங்கப்படுகிறது. ரேடிக்ஸ் எண் கொண்டவர்கள் சனி பகவானை ஆளும் அதிபதியாக கொண்டவர்கள். வேத ஜோதிடத்தில் சனி பகவான், தனி நபரின் வினைகளுக்கு ஏற்ப கர்ம பலனை அளிக்கும் கிரகம் ஆவார்.

சனி பகவானின் குணம், அவருடன் தொடர்பு கொண்ட 'ரேடிக்ஸ் எண் 8' கொண்டவர்களிடமும் காணப்படுகிறது. ரேடிக்ஸ் எண் 8 கொண்டவர்கள் அடிப்படையில் கடின உழைப்பாளிகள், தங்கள் லட்சியங்களை அடைய எவ்வளவு பெரிய சவாலையும் சந்திக்க தயாராக இருப்பவர்கள். தங்கள் இலக்கை அடைய நிதானமாக காத்திருப்பவர்கள்.

மறுபுறம், தங்கள் பொறுமையை பாதிக்கும் விஷயங்களை யாரும் செய்தால், அவர்களை கடுமையாக எதிர்க்கும் குணத்தையும் கொண்டுள்ளனர். தங்கள் வாழ்நாள் முழுவதும் அந்த ஒரு நபரை மறக்க மாட்டார்கள், வாழ்நாள் எதிரிகளாக அவர்களை ஏற்பார்கள். ரேடிக்ஸ் எண் 8 கொண்டவர்களின் ஆதரவை நீங்கள் ஒரு முறை இழந்துவிட்டால், மீண்டும் அவர்களின் ஆதரவை பெறுவது இயலாத ஒரு விஷயம் என நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

**ரேடிக்ஸ் எண் 9**

ஆண்டின் எந்த ஒரு மாதத்திலும் 9, 18, 27 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு ரேடிக்ஸ் எண் 9 வழங்கப்படுகிறது. எண் 9 கொண்டவர்கள், செவ்வாய் கிரகத்தை ஆளும் அதிபதியாக கொண்டுள்ளனர். வேத ஜோதிடத்தில் சிவப்பு கிரகம் – ஆக்ரோஷமான ஒரு கிரகமாக எண் 9 பார்க்கப்படுகிறது. ஆற்றல் மிக்க செவ்வாய் கிரகத்தை ஆளும் அதிபதியாக கொண்ட இவர்களின் கோபத்தை கட்டுப்படுத்துவது இயலாத ஒரு விஷயம்.

அடிப்படையில் தன்மையாக நடந்துக்கொள்ளும் குணம் கொண்ட இவர்கள், தன்னை சீண்டும் நபர்களை எதிர்கொள்ள தயங்குவது இல்லை. யாருக்கும் அஞ்சுவது கிடையாது, தனது விருப்பம் போல் துணிச்சலாக செயல்படுவார்கள். முன் கோபம் கொண்டிருக்கும் இவர்கள், தங்கள் உணர்வுகளை சீண்டும் நபர்களை ஒருபோதும் விட்டு வைப்பது கிடையாது.

சுயமரியாதையை விட்டுக்கொடுக்க மாட்டார்கள், தன்னை சார்ந்து இருப்பவர்களின் மதிப்பு, மரியாதையையும் அவர்கள் விட்டுக்கொடுப்பது இல்லை. தன் உணர்வுகளை பாதிக்கும் நபர்களுக்கு தக்க பதிலடி கொடுக்க, எந்த ஒரு எல்லைக்கும் செல்ல தயாராக இருப்பார்கள். எனவே, இவர்களிடன் ஒருபோதும் வழக்குகளை உண்டாக்க வேண்டாம், தேவையற்ற பிரச்சனைகளை செய்ய வேண்டாம்.

## டெல்லியில் 25-ந்தேதி கூடுகிறது காவிரி மேலாண்மை ஆணையம்!



புதுடெல்லி, மார்ச். 21–

காவிரி மேலாண்மை ஆணையத்தின் 49–வது கூட்டம் டெல்லியில் அந்த ஆணைய அலுவலகத்தில் வருகிற 25–ந்தேதி நடைபெற இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. ஆணைய தலைவர் எஸ்.கே. ஹல்தார் தலை மையில் நடைபெறும் இந்த கூட்டத்தில், காவிரியோடு தொடர்புடைய தமிழ்நாடு, கர்நாடகம், புதுச்சேரி மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களின் அதிகாரிகளுக்கு இதுகுறித்த தகவல்கள் அனுப்பப்பட்டு இருப்பதாக தெரிகிறது.

# நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## கோடைக்காலத்தில் கண் எரிச்சல் அதிகமாக இருக்கா..? இதை எப்படி தடுப்பது..?



கோடைக்காலம் தொடங்கிவிட்டது.. ஒருபக்கம் வெயில் சுட்டெரித்து வரும் நிலையில், ஒன்றன்பின் ஒன்றாகப் பல பிரச்சனைகள் எழத் தொடங்குகின்றன. சிறுநீர் எரிச்சல், கண்களில் நீர் வடிதல், நீரிழப்பு மற்றும் பல பிரச்சனைகள் எழுகின்றன. கடந்த சில வாரங்களாகக் கட்டுப்படுத்த முடியாத கண் நீர் வடிதலை நீங்கள் அனுபவித்து வருகிறீர்களா?

கண்களில் நீர் வடிதல், கண் வலி, கண் எரிச்சல் அல்லது பிற கண் பிரச்சனைகளை நீங்கள் எதிர்கொள்கிறீர்களா? இதனால் நீங்கள் மன அழுத்தத்தில் இருக்கிறீர்களா?

உங்களுக்குப் போதுமான தூக்கம் கிடைக்கவில்லையா? உங்கள் தலைக்குப் போதுமான எண்ணெய் தடவவில்லையா? வெப்பமாக இருக்கிறதா? இப்படிச் சிந்திப்பதால் உங்களுக்குத் தலைவலி ஏற்படுகிறதா? அப்படியானால், உங்கள் கண்கள் ஏன் எரிகின்றன, அதைச் சரிசெய்ய என்ன செய்வது என்பது குறித்து பார்க்கலாம்..

கோடைக்காலத்தில் கண்களில் எரிச்சல் ஏற்படுவதற்கான மிகவும் பொதுவான காரணம், ஏசியிலிருந்து வரும் வறண்ட காற்றுதான். வெளியில் நிலவும் அதிக வெப்பநிலையால், கண்ணீர் விரைவாக வற்றுவது மட்டுமல்லாமல், கண்களும் மிக விரைவாக வறண்டுவிடுகின்றன. இது கண்களில் எரிச்சல் உணர்வை ஏற்படுத்துகிறது.

**கோடைக்காலத்தில் கண்களில் எரிச்சல் ஏற்படுவதற்கான முக்கிய காரணங்கள்**

வறட்சி மற்றும் நீரிழப்பு: அதிக வெப்பநிலை மற்றும் ஏசி ஆகியவை ஈரப்பதத்தைக் குறைத்து, கண்ணின் கண்ணீர்ப் படலத்தை ஆவியாக்குகின்றன. இது வறட்சி மற்றும் எரிச்சலுக்கு வழிவகுக்கிறது.

ஒவ்வாமை ஏற்படுத்தும் பொருட்கள், குளோரின் கலந்த நீச்சல் குளங்களில் நீந்துவது, அல்லது நீண்ட நேரம் கைபேசி அல்லது மடிக்கணினியை உற்றுப் பார்ப்பது போன்றவையும் உங்கள் கண்களில் எரிச்சலை ஏற்படுத்தும்.

இயற்கையாகவே, இது கோடைக்காலம் என்பதால், வெப்பம் மற்றும் தூசியின் காரணமாக உங்கள் கண்கள் எரியத் தொடங்கும். உங்கள் உச்சந்தலைக்கு முறையாக எண்ணெய் தடவாமலும் இது நிகழ்கிறது.

அதிகப்படியான ஷாம்பு பயன்பாடு கூட ஒரு காரணமாக இருக்கலாம்.. இது ஏற்கனவே கோடைக்காலம். இத்தகைய சூழ்நிலையில், முடியை உலர்த்தும் ஷாம்புகளை அடிக்கடி பயன்படுத்துவது கண்களில் நேரடி விளைவை ஏற்படுத்துகிறது. தினமும் ஷாம்பு பயன்படுத்துவதும் கண் எரிச்சலுக்கு ஒரு காரணமாகும்.

**இதைத் தடுக்க என்ன செய்யலாம் ?**

வெளியே செல்லும்போது சன்கிளாஸ் அணிவதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள். நீரேற்றத்துடன் இருங்கள். நீந்தும்போது கண்ணாடிகளைப் பயன்படுத்துங்கள், மேலும் மின்விசிறிகளிலிருந்து வரும் நேரடிக் காற்றைத் தவிர்க்கவும்.

நீரேற்றத்துடன் இருங்கள்: நிறைய தண்ணீர் குடிப்பது உடல் ஈரப்பதத்தை பராமரிக்கவும், கண் வறட்சியைக் குறைக்கவும் உதவுகிறது. உங்கள் கண்களைக் கழுவுங்கள்: வியர்வை, சன்ஸ்கிரீன் அல்லது குளோரின் ஆகியவற்றைக் கழுவ சுத்தமான, குளிர்ந்த நீரைப் பயன்படுத்துங்கள். இது கண் அழுத்தத்தைக் குறைக்கவும் உதவுகிறது.

உங்கள் உச்சந்தலை மிகவும் சூடாக இருப்பதாக உணர்ந்தால், தலையில் எண்ணெய் தடவி மசாஜ் செய்யவும். செம்பருத்திப் பூ அல்லது ரோஜா நீரை தலையில் தடவுவது வெப்பத்தைத் தணிக்கும். வாரத்திற்கு ஓரிரு முறை உங்கள் கண்களின் மீது வெள்ளரிக்காய் துண்டை வைக்கவும். இதை ஒன்றரை மணி நேரம் செய்வது உங்கள் கண்களுக்குச் சற்று நிம்மதியை அளிக்கும். மேலும், முடிந்தவரை அதிக அளவு தண்ணீர் குடியுங்கள். மடிக்கணினிகள் மற்றும் அலைபேசிகளை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்துவதைக் குறையுங்கள். அவற்றைப் பயன்படுத்தும்போது கண்ணாடிகளை அணிந்துகொள்ள மறக்காதீர்கள். இது உங்களுக்குச் சற்று நிவாரணம் பெற உதவும்.



திமுக திருப்பூர் வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளரும் மேயர் ந.தினேஷ்குமார் ஆலோசனைப்படி பாண்டியன் நகர் பகுதி கழக செயலாளர் வெ.ஜோதி வழிகாட்டுதலின்படி 5 வது வார்டு ஜி.என். கார்டன் பகுதியில் பூத் எண் –157,158 பூத் பொறுப்பாளர (மகளிர்)திருமதி நாகஜோதி பிஎல்சி திருமதி,லலிதா, ஆறுமுகம், சங்கர்,துரைராஜ் ,ஒவ்வொரு வீடு வீடாக சென்று குடும்பம் குடும்பமாக ஒவ்வொரு வீதிதோரும் முதலமைச்சர் சாதனைகளை எடுத்துரைத்து ஸ்டாலின்_ மகளீர்படை பிரச்சார பரப்புரையை மேற்கொண்டு வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணி மேற்கொண்டனர் உடன் தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர், BLA 2 ம.நவீன்குமார் உடன் இருந்தார்...

# ஏப்ரல் 1 முதல் கிரெடிட் கார்டு விதிகள் மாற்றம்! PAN முதல் ஸ்பெண்டிங் லிமிட் வரை - செய்ய வேண்டியது?

புதுடெல்லி, மார்ச். 21–

உங்கள் பர்சில் இருக்கும் கிரெடிட் கார்டு இனி முன்போல இருக்காது. வரும் ஏப்ரல் 1 முதல் நிதித்துறை கொண்டு வரும் அதிரடி மாற்றங்கள், உங்கள் ஷாப்பிங் மற்றும் பணப் பரிவர்த்தனை முறையை மாற்ற போகின்றன. இனி விருப்பம்போல செலவு செய்ய முடியாது. ஏனென்றால் நீங்கள் செய்யும் ஒவ்வொரு 10 லட்சம் ரூபாய் செலவையும் வருமான வரித் துறை உன்னிப்பாக கவனிக்க தொடங்கிவிடும். பான் கார்டு இணைப்பு முதல் புதிய ஸ்பெண்டிங் லிமிட் வரை, கிரெடிட் கார்டு பயனர்கள் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டிய 5 மாற்றங்கள் இதோ. இந்த விதிகளை மீறினால் அபராதம் முதல் கார்டு பிளாக் செய்யப்படுவது வரை பல சிக்கல்கள் ஏற்படலாம். ஆக புது நிதியாண்டு தொடங்கும் முன்பே உங்களை நீங்களே தயார்படுத்திக் கொள்ளுங்கள்.

வரும் ஏப்ரல் 01, 2026 முதல் அமலுக்கு வரவுள்ள புதிய வருமான வரிச் சட்டம் 2025, லட்சக்கணக்கான மக்கள் தங்களது கிரெடிட் கார்டுகளை பயன்படுத்தும் முறையை மாற்றியமைக்க உள்ளது. அதிக மதிப்புள்ள பணப் பரிவர்த்தனைகளை தீவிரமாக கண்காணிப்பதில் தொடங்கி, கிரெடிட் கார்டு மூலம் வரி செலுத்தும் வசதி வரை பல முக்கிய மாற்றங்கள் இதில் இடம்பெற்றுள்ளன. ஆக கிரெடிட் கார்டு பயன்படுத்துவோர் எச்சரிக்கையோடு இருத்தல் அவசியம். இந்த புதிய மாற்றம் நிதிப் பரிவர்த்தனை களில் வெளிப்படைத்தன்மையை அதிகரிப்பதும், வரி ஏய்ப்பை தடுப்பதுமே முக்கிய நோக்கமாகும்.



ஏப்ரல் 1 முதல் வரும் கிரெடிட் கார்டு மாற்றங்கள்!

**1. அதிகப்படியான செலவுகள் மீது தீவிர கண்காணிப்பு;**

உங்கள் அதிகப்படியான கிரெடிட் கார்டு செலவுகள் இனி வருமான வரித்துறையின் நேரடி பார்வையில் இருக்கும்.ஒருநிதியாண்டில் டிஜிட்டல் முறையில் (கிரெடிட் கார்டு வழியாக) 10 லட்சம் ரூபாய் அல்லது அதற்கு மேல் நீங்கள் செலவு செய்தால், அந்த விவரங்களை வங்கி கள் வருமான வரித்துறைக்கு தெரிவிக்கும். நீங்கள் பயன்படுத்திய கிரெடிட் கார்டு பில்லை செலுத்த 1 லட்சம் ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை ரொக்கமாக பயன்படுத்தினாலும் அது அதிகாரிகளின் கவனத்திற்கு செல்லும். ஏற்கனவே இத்தகைய கண்காணிப்பு இருந்தாலும், புதிய விதிகள் மூலம் வரி ஏய்ப்பை தடுக்க கூடுதல் நெருக்கடி கொடுக்கப்பட லாம். ஆக நீங்கள் இனி கிரெடிட் கார்டு மூலம் பெரிய அளவிலான பரிவர்த்தனை செய்யப் போகிறீர்கள் எனில் அதை மனதில் வைத்துக் கொண்டு செயல்படுங்கள்.

**2. PAN கார்டு வாங்க கிரெடிட் கார்டு ஸ்டேட்மென்ட் போதும்! :**

3. புதிய பான் (PAN) கார்டு விண்ணப்பிப்பவர்களுக்கு இது ஒரு நற்செய்தி. உங்களிடம் வீட்டு வரி ரசீது அல்லது மின்சார பில் போன்ற வழக்கமான முகவரி சான்றுகள் இல்லை என்றால், உங்கள் கடந்த 3 மாத கிரெடிட் கார்டு ஸ்டேட்மென்ட்–ஐ முகவரி சான்றாக பயன்படுத்தலாம். ஆனால் இதில் விண்ணப்பதாரரின் தற்போதைய முகவரி தெளிவாகவும், சரியாகவும் இருக்க வேண்டும் என்பது கட்டாயம்.

**3. கிரெடிட் கார்டு மூலம் வருமான வரி செலுத்தலாம்!**

2026–ல் எதிர்காலத்தை மாற்றப்போகும் சிறு சேமிப்பு திட்டங்கள்! இதுவரை நெட் பேங்கிங் அல்லது டெபிட் கார்டு மூலம் மட்டுமே வருமான வரி செலுத்த முடியும் என்று இருந்த நிலையில், இனி உங்கள் கிரெடிட் கார்டை பயன்படுத்தியும் வரி செலுத்தலாம். இது வரி செலுத்துபவர்களுக்கு பணப்புழக்கம் மற்றும் கூடுதல் கால அவகாசத்தையும் தரும். இருப்பினும் கிரெடிட் கார்டு மூலம் வரி செலுத்தும்போது வங்கி வசூலிக்கும் செயல்பாட்டு கட்டணம் மற்றும் வட்டி விகிதங்களை கவனத்தில் கொள்ள வேண்டும். இதனால் நீங்கள் செலுத்தும் மொத்த தொகை சற்று அதிகரிக்க வாய்ப்புள்ளது.

**4.கம்பெனி கார்டை சொந்த தேவைக்கு பயன்படுத்தினால் வரி!**

5. உங்கள் நிறுவனத்தின் கிரெடிட் கார்டை, உங்கள் சொந்த தேவைகளுக்கு பயன்படுத்தினால் அதனால் ஏற்படும் சிக்கல்களையும் கவனத்தில் கொள்வது நல்லது. உங்கள் நிறுவ னத்தின் கார்டை, உங்கள் தனிப்பட்ட தேவைகளுக்கு பயன்படுத்தினால், அந்த தொகை உங்கள் வருமானத்தின் ஒரு பகுதியாக கருதப்படும். அதற்கும் நீங்கள் வரி செலுத்த வேண்டியிருக்கும். பொதுவாக நிறுவன கார்டுகளை வணிக ரீதியான பயணம், வாடிக்கையாளர்களை சந்திக்க செல்லு தல் அல்லது வேலை நிமித்தமாக மற்ற பயன்பாடுகளுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். அதற்கு வரி விலக்கு உண்டு. ஆனால் அதற்கும் சரியான ஆவணங்களை நிறுவ னங்கள் பராமரிக்க வேண்டும்.

**6.இனி பான் இல்லா மல் கிரெடிட் கார்டு கிடையாது!**

இனி கிரெடிட் கார்டுக்கு விண்ணப்பிக்கும் போது 'பான் கார்டு வழங்குவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஒருவேளை உங்களிடம் பான் கார்டு இல்லை என்றால், வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்கள் உங்கள் விண்ணப்பத்தை நிராகரித்து விடும். கார்டு மூலம் நீங்கள் செய்யும் பெரிய அளவிலான பணப் பரிவர்த்தனைகளை நேரடியாக, உங்கள் வரி பதிவுகளுடன் இணைப்பதே இதன் முக்கிய நோக்கமாகும். மேலும் அடையாளம் தெரியாத நபர்களின் பெயரில் கார்டு வாங்குவது அல்லது நிதி முறைகேடுகளில் ஈடுபடுவதை தடுக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# ரம்ஜான் பண்டிகை: தமிழகம் முழுவதும் இஸ்லாமியர்கள் உற்சாக கொண்டாட்டம்!

சென்னை, மார்ச். 21–

ஈகை திருநாளான ரம்ஜான் பண்டிகை நாடு முழுவதும் இன்று கோலாகலமாக கொண்டாப்படுகிறது.

இஸ்லாமிய மார்க்கத்தின் மிக முக்கியமான பண்டிகைகளில் ஒன்றான ஈகைத் திருநாள் எனப்படும் ரம்ஜான் பண்டிகை, இன்று தமிழகம் முழுவதும் மிகுந்த உற்சாகத்துடனும் கொண்டாடப்படுகிறது.

ஒரு மாத கால புனித ரமலான் நோன்பை நிறைவு செய்யும் விதமாக, ஷவ்வால் மாதத்தின் முதல் பிறை தென்பட்டதைத் தொடர்ந்து இந்த விழா கோலாகலமாகத் தொடங்கியுள்ளது.

காலையிலேயே புத்தாடை அணிந்து இஸ்லாமியர்கள் சிறப்பு தொழுகையில் ஈடுபட்டு ஒருவருக்கொருவர் ஆரத்தழுவி வாழ்த்துகளை பரிமாறி கொண்டனர்.



தமிழகத்தில் சென்னை, கோவை, மதுரை, திருநெல்வேலி, தென்காசி உள்பட அனைத்து மாவட்டங்களிலும் ரம்ஜான் பண்டிகை உற்சாகமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மசூதிகள் மற்றும் திறந்தவெளி ஈத்கா மைதானங்களில் சிறப்புத் தொழுகைகள் நடத்தப்பட்டு, மக்கள் ஒருவருக்கொருவர் கட்டித்தழுவி ரம்ஜான் வாழ்த்துகளை பரிமாறி வருகின்றனர். ரம்ஜான் பண்டிகையையொட்டி பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

# ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதி தி.மு.க.நிர்வாகிகள் கூட்டம்!

ஆண்டிபட்டி,மார்ச் 21–

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதி கடமலைக்குண்டு – மயிலாடும்பாறை ஒன்றிய தி.மு.க.நிர்வாகிகள் கூட்டடம் கடமலைகுண்டு தனியார் மண்டபத்தில் நடந்தது. கூட்டத்திற்கு தேனி தெற்கு மாவட்ட செயலாளர் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ.தலைமை தாங்கினார். ஆண்டிப்பட்டி எம்.எல்.ஏ.மகாராசன், கடமலை, மயிலை, ஒன்றிய செயலாளர்கள் சுப்பிரமணியன், தங்கபாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் கலந்து கொண்ட சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மாநிலத் தேர்தல் பணிக்குழு செயலாளர் கம்பம் செல்வேந்திரன். மாநில தீர்மானக் குழு இணைச் செயலாளர் ஜெயக்குமார் மாநில தலைமை செயற்குழு உறுப்பினர் ஆசையன். மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் பாண்டியன். மாவட்ட துணை செயலாளர்கள் வேப்பம்பட்டி செந்தில். மலைச்சாமி . மற்றும் ஒன்றிய செயலாளர்கள் இளைஞரின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




## பயணிகள் கவனத்துக்கு.. நந்தனம் மெட்ரோ ரயில் நுழைவாயில் நிரந்தரமாக மூடல்..!




சென்னை, மார்ச். 21–

சென்னை நந்தனம் மெட்ரோ ரயில் நுழைவாயில் நிரந்தரமாக மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. முக்கிய உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் ஒருங்கிணைப்புப் பணிகளைச் சுலபமாக்குவதற்கு, நந்தனம் மெட்ரோ நிலையத்தில் உள்ள தற்போதைய B4 நுழைவாயிலை மூடுவது அவசியமாகும் என சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881

# வேலை வாய்ப்பு

## இந்த வாரம் தவறவிடக்கூடாத 3 முக்கிய அரசு வேலைவாய்ப்புகள்!

மத்திய, மாநில அரசுத் துறைகள் மற்றும் முன்னணி பொதுத்துறை நிறுவனங்களில் காலியாக உள்ள ஆயிரக்கணக்கான பணியிடங்களை நிரப்புவதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்புகள் வெளியாகியுள்ளன. ஆர்வமும், தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் அதிகாரப்பூர்வ இணையதளங்கள் மூலம் கூடுதல் விவரங்களைத் தெரிந்துகொண்டு உடனடியாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. சென்ட்ரல் வங்கி ஆஃப் இந்தியா 275காலியிடங்கள்:


சென்ட்ரல் வங்கி ஆஃப் இந்தியா 275 காலிப்பணியிடங்களுக்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இதற்கு கல்வித் தகுதியாக பி.இ / பி.டெக் அல்லது எம்.சி.ஏ (MCA) முடித்திருக்க வேண்டும். தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் மார்ச் 23, 2026–க்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

2. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தில் 04 காலியிடங்கள்:

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தில் காலியாக உள்ள 4 பணியிடங்களை நிரப்ப அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. பி.இ / பி.டெக், பி.ஆர்க் (B.Arch) அல்லது எம்.பி.ஏ (MBA) முடித்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிப்பதற்கான இறுதி நாள்: மார்ச் 23, 2026 ஆகும்.


3. மகாநதி நிலக்கரி நிறுவனத்தில் 664 பணியிடங்கள்;

மகாநதி நிலக்கரி நிறுவனத்தில் 664 பணியிடங்கள் காலியாக உள்ளன. டிப்ளமோ, ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு அல்லது பி.இ / பி.டெக் முடித்தவர்கள் இந்தப் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்களை அனுப்பக் கடைசித் தேதி: 06.04.2026.



# சினிமா துளிகள்..!

## நடிப்பு, கார் பந்தயத்தை தொடர்ந்து புதிய அவதாரம் எடுக்கும் அஜித்!



தமிழ் சினிமாவின் முன்னணி நடிகரான அஜித்குமார், கார் பந்தய வீரரும் கூட. சர்வதேச அளவில் பல விருதுகளை குவித்துள்ள அஜித்குமார் தற்போது தொடர் கார் பந்தயங்களில் பிசியாக இருக்கிறார்.

'குட் பேட் அக்லி' படத்தை தொடர்ந்து அவர் மீண்டும் ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் புதிய படத்தில் நடிப்பார் என்று தெரிகிறது.

இதற்கிடையில் நடிகர் தாண்டி அஜித்குமார் புதிய அவதாரம் எடுத்திருக்கிறார். ஆம், இனி தயாரிப்பாளராகவும் அஜித்குமார் மாறவுள்ளார்.

அஜித்குமார் ஸ்போர்ட்ஸ் சர்வீஸ் எல்.எல்.சி. என்ற பெயரில் அவர் புதிய நிறுவனத்தை தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபையில் (பிலிம் சேம்பர்) பதிவு செய்திருக்கிறார். மேலும் ரூ.2.56 லட்சம் செலுத்தி ஆயுட்கால உறுப்பினராகவும் தனது பெயரை பதிவு செய்துள்ளார்.

அஜித்குமாரின் இந்த புதிய முடிவு அவரது ரசிகர்களுக்கு ஆச்சரியத்தை தந்துள்ளது. அதேவேளை தயாரிப்பாளராகி விட்டால் இனி படங்கள் நடிப்பாரா, மாட்டாரா? என்ற கேள்வியையும் எழச் செய்துள்ளது. அஜித்குமாரின் சமீபகால போக்கு புரியாத புதிராகவே இருப்பதாக திரையுலகினரும், ரசிகர்களும் பேசிக் கொள்கிறார்கள்.

## விஜயின் திடீர் மும்பை பயணம் எதற்காக தெரியுமா? - வெளியான புதிய தகவல்!



மும்பை, மார்ச். 21–

தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய் நேற்று திடீரென சென்னை விமான நிலையத்தில் இருந்து தனி விமானம் மூலம் மும்பை புறப்பட்டு சென்றார். அவரது மும்பை பயணம் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த நிலையில், விஜயின் மும்பை பயணம் குறித்த தகவல் வெளியாகி உள்ளது.

மும்பையில் நடந்த இயக்குனர் அட்லீ மனைவி பிரியா வளைகாப்பு விழாவில் விஜய் பங்கேற்று வாழ்த்தினார். இதில் கலந்து கொள்வதற்காகவே விஜய் மும்பை சென்றுள்ளார். இந்த புகைப்படங்கள் வெளியாகி விஜயின் மும்பை பயணத்தின் பரபரப்பை முடிவுக்கு கொண்டு வந்தது.

விஜய் நடித்த 'தெறி', 'மெர்சல்' மற்றும் 'பிகில்' ஆகிய படங்களை அட்லி இயக்கி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.





# அனல் பறக்கும் தேர்தல் களம்..!



## நகர்ப்புற வாக்காளர்களைக் கவர தேர்தல் ஆணையம் புதிய வியூகம்!

சென்னை, மார்ச். 21–

தமிழ்நாட்டில் நகர்ப்புற வாக்காளர்களின் ஆர்வமின்மையைக் குறைக்கும் வகையில், உயரமான அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் குழு வீட்டு வசதி சங்க வளாகங்களுக்கு உள்ளேயே 14 வாக்குச்சாவடி வசதிக ளைத் தேர்தல் ஆணையம் ஏற்படுத்தியுள்ளது என தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:



**1. அரசியல் விளம்பரங்களுக்கான முன்–சான்றிதழ்**

மின்னணு அல்லது சமூக ஊடகங்களில் அரசியல் விளம்பரங்களை வெளியிட விரும்பும் அனைத்து அரசியல் கட்சிகள், போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் இதர நபர்கள், மாநில அல்லது மாவட்ட அளவிலான ஊடக சான்றிதழ் மற்றும் கண்காணிப்புக் குழுவிடம் (எம்.சி.எம்.சி) முன்–சான்றிதழ் பெற வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் ஒளிபரப்பிற்கு குறைந்தபட்சம் 3 நாட்களுக்கு முன்னதாகவும், அங்கீகரிக்கப்படாத கட்சிகள் 7 நாட்களுக்கு முன்னதாகவும் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பங்கள் 48 மணி நேரத்திற்குள் பரிசீலிக்கப்படும். இந்தக் குழுக்கள் 'கட்டணச் செய்திகள்' (Paid News) உள்ளிட்ட ஊடகத் தளங்களின் தவறான பயன்பாட்டைத் தடுக்க அமைக்கப்பட்டுள்ளன.

**2. செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ) மூலம் உருவாக்கப்பட்ட உள்ளடக்கங்களுக்கான வழிகாட்டுதல்கள்**

'ஆழ் மாறாட்டம்' (Deep–fakes) மற்றும் ஏ.ஐ மூலம் உருவாக்கப்பட்ட உள்ளடக்கங்களால் ஏற்படும் சவால்களைக் கருத்தில் கொண்டு தேர்தல் ஆணையம் கடுமையான வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.

ஏ.ஐ மூலம் உருவாக்கப்பட்ட அல்லது டிஜிட்டல் முறையில் மாற்றப்பட்ட அனைத்து உள்ளடக்கங்களிலும் "ஏ.ஐ–ஆல் உருவாக்கப்பட்டது", "டிஜிட்டல் முறையில் மேம்படுத்தப்பட்டது" அல்லது "செயற்கை உள்ளடக்கம்" போன்ற தெளிவான லேபிள்கள் இருக்க வேண்டும்.

இது காட்சிப் பரப்பில் குறைந்தபட்சம் 10% அல்லது ஆடியோ உள்ளடக்கத்தின் ஆரம்ப 10% நேரத்தை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

ஒருவரின் அனுமதி இன்றி அவரது அடையாளம், குரல் அல்லது தோற்றத்தைத் தவறாகச் சித்தரிக்கும் மற்றும் வாக்காளர்களைத் திசைதிருப்பக்கூடிய உள்ளடக்கங்கள் முற்றிலுமாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

அரசியல் கட்சிகளின் சமூகவலைதள பக்கங்களில் இத்தகைய தவறான அல்லது சட்டவிரோத உள்ளடக்கங்கள் கண்டறியப்பட்டாலோ அல்லது அது குறித்து புகார் அளிக்கப்பட்டாலோ, 3 மணி நேரத்திற்குள் அவை நீக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**3. வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கான (BLO) ஊதியம் உயர்வு (2025–2026)**

பிழையற்ற வாக்காளர் பட்டியலே துடிப்பான ஜனநாயகத்தின் அடிப்படை என்பதை இந்தியத் தேர்தல் ஆணையம் வலியுறுத்துகிறது.


தற்போது, தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் திருத்தப் பணியில் மொத்தம் 75,037 அலுவலர்கள் ஈடுபட்டுள்ளனர். அவர்களின் ஆண்டு ஊதியம் ரூ. 6,000–லிருந்து ரூ. 12,000–ஆக இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது. கூடுதலாக, சிறப்புத் திருத்தப் பணிகளுக்காக (SSR/SR) ரூ. 2,000 சிறப்பு ஊக்கத்தொகையும் வழங்கப்படுகிறது.

இதன்படி, 2025–2026–ம் ஆண்டிற்காக தமிழ்நாடு முழுவதும் உள்ள BLO–க்களுக்கு மொத்தம் ரூ. 99,81,54,000/– (ரூபாய் தொண்ணூற்று ஒன்பது கோடியே எண்பத்தியோரு லட்சத்து ஐம்பத்தி நான்காயிரம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4. அடுக்குமாடி குடியிருப்புகளில் வாக்குச்சாவடிகள்

நகர்ப்புற வாக்காளர்களின் ஆர்வமின்மையைக் குறைக்கும் வகையில், உயரமான அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் குழு வீட்டு வசதி சங்க வளாகங்களுக்குள்ளேயே வாக்குச்சாவடி வசதிகளைத் தேர்தல் ஆணையம் ஏற்படுத்தியுள்ளது. இதன்படி, 2026 சிறப்புத் தீவிரத் திருத்தத்தின் (எஸ்.ஐ.ஆர்) போது இத்தகைய இடங்களில் 14 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன." என்று தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

## சட்டசபை தேர்தல் சசிகலா–ராமதாஸ் கைகோர்ப்பு!



திண்டிவனம், மார்ச். 21–

தமிழக சட்டசபை தேர்தலில் ராமதாஸ், சசிகலா தரப்பில் கூட்டணி அமைத்து போட்டியிடுவதாக அறிவித்தனர்.

திண்டிவனத்தில் நேற்று மாலை பா.ம.க., நிறுவனர் ராமதாசும் அனைத்திந்திய புட்சித் தலைவர் மக்கள் முன்னேற்ற கழக தலைவர்சசிகலாவும், சட்டசபை தேர்தலில் கூட்டணி அமைத்து போட்டியிடுவதுஎன முடிவெடுத்து அறிவித்தனர். அதற்கான ஒப்பந்தத்தில் இருவரும் கையெழுத்திட்டனர்.

ராமதாஸ், சசிகலா ஆகிய இரு தரப்பினரும் வெளியிட்ட அதிகாரப்பூர்வ அறிவிப்பு:

அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்ற கழகம் மற்றும் பா.ம.க., வரும் சட்டசபை தேர்தலில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இணைந்து போட்டியிடும். தமிழகத்தின் துரோக அடையாளங்களை களைந்து மக்கள் நலனையும், தமிழகத்தின் சுயமரியாதை மற்றும் தன்னாட்சியை மேம்படுத்தும் விதமாக இக்கூட்டணி செயல்படும்.

இவ்வாறு, அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ராமதாஸ் வீட்டில், சசிகலாவுக்கு இட்லி, பொங்கல் உணவு வழங்கப்பட்டது. வீட்டுக்கு வெளியே காத்திருந்த இரு கட்சி தொண்டர்களுக்கும் பிரியாணி வழங்கப்பட்டது.

## பா.ஜ.க. மேலிட பொறுப்பாளர் பியூஷ் கோயலின் சென்னை பயணம் ரத்து!



சென்னை, மார்ச். 21–

பாஜக மேலிட பொறுப்பாளர் பியூஷ் கோயலின் சென்னை பயணம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. முன்னதாக சென்னையில் இன்று கூட்டணி கட்சி தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் கூட்டணி கட்சி தலைவர்களான அன்புமணி, டிடிவி தினகரன் ஆகியோர் டெல்லியில் அமித்ஷாவை சந்தித்து பேச உள்ளநிலையில், பியூஷ் கோயலின் இன்றைய சென்னை பயணம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## 'எகிறும்' பிரசார செலவினம்; 'அலறும்' அரசியல் கட்சியினர்!



இது தான் பிரசார செலவு

ஒருநாள் வாடகை (ரூபாயில்)

| | | |
|---|---|---|
| பிரசார வாகனம் | – | 2,000 |
| ஆம்பிளிபயர் | – | 220 |
| ஸ்பீக்கர் | – | 600 |
| ஹேண்ட் மைக் | – | 100 |
| ஸ்டாண்ட் மைக் | – | 150 |
| மைக் | – | 100 |
| சீரியல் செட் | – | 80 |
| டியூப் லைட் | – | 20 |
| ஏர்கூலர் | – | 300 |

ஜெனரேட்டர் ஒருநாள் வாடகை (ரூபாயில்)

| | | |
|---|---|---|
| 3 கே.வி.ஏ. | – | 500 |
| 6 கே.வி.ஏ. | – | 600 |
| 10 கே.வி.ஏ. | – | 700 |
| 62.5 கே.வி.ஏ. | – | 1,797 |
| 125 கே.வி.ஏ. | – | 3,709 |
| ஏ பேனல் போர்டு | – | 872 |

திருப்பூர், மார்ச். 21–

திருப்பூர் மாவட்ட தேர்தல் பிரிவினர் தயாரித்த பிரசார வாகனம், மைக் செட் தொடர்பான விலை பட்டியலை பார்த்த அரசியல் கட்சியினர், அதிர்ச்சி அடைந்தனர். நடைமுறை கட்டணத்தைவிட அதிகமாக உள்ளதாக எதிர்ப்பு தெரிவித்தனர். சட்டசபை தேர்தல் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினருக்கான ஆலோசனை கூட்டம், திருப்பூர் கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நேற்று நடைபெற்றது. கலெக்டர் மனிஷ் நாரணவரே தலைமை வகித்தார். தேர்தல் செலவினங்களை கணக்கிடுவற்கான விலை பட்டியல் தொடர்பாக ஆலோசிக்கப்பட்டது.

மாவட்ட தேர்தல் பிரிவினர் தயாரித்த விலை பட்டியல் விவரங்கள், பவர்பாய்ன்ட் வாயிலாக, ஸ்கிரீனில் ஒளிபரப்பப்பட்டது.

அதன் விவரம் வருமாறு: இந்த பட்டியலைபார்த்த அரசியல் கட்சியினர் ஷாக் ஆகினர். 'பிரசார வாகனம் தனியாகவும், மைக், ஸ்பீக்கர் தனியாகவும் வாடகைக்கு எடுப்பதில்லை. ஒரு பிரசார வாகனத்தில், ஒரு ஆம்ப்ளிபையர், ஒரு மைக், 4 ஸ்பீக்கர், 2 டியூப்லைட், ஒரு போகஸ் லைட்; ஒரு மைக்; 3 கிலோவாட் ஜெனரேட்டர் ஆகியவை இருக்கும். இவை அனைத்தையும் சேர்த்துதான் ஒருநாள் வாடகை, 1,500 ரூபாய். ஆனால், தேர்தல் பிரிவினர், பிரசார வாகனத்துக்கு மட்டும் நாளொன்றுக்கு, 2 ஆயிரம் ரூபாயாக விலை நிர்ணயம் செய்துள்ளனர். இதுதவிர, ஸ்டாண்ட் மைக், ஹேண்ட் மைக் என தனித்தனி வாடகை நிர்ணயித்துள்ளனர். ஆனால், நடைமுறையில் அனைத்திற்கும் ஒரே வாடகைதான். ஸ்பீக்கருக்கு, 150 ரூபாய்க்கு மேல் வாடகை வாங்குவதில்லை; ஆனால்,விலை பட்டியலில்,600 ரூபாய்நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கட்சியினர் தெரிவிக்கும் கருத்துக்கள் அதனடிப்படையில், விலை பட்டியலை இறுதி செய்யுங்கள்' என, அனைத்து கட்சியினரும் ஒருசேர தெரிவித்தனர். முதல் ஸ்லைடிலேயே ஆட்சேபணை கிளம்பியதால், உணவு விலை பட்டியல் உள்ளிட்ட அடுத்தடுத்த பொருட்களில் விலை பட்டியல் விவரங்களை காட்சிப்படுத்தாமல், அதிகாரிகள், 'டக்' என்றுகூட்டத்தை முடித்துக்கொண்டனர்.

## ஒரு பக்கம்.. தொகுதி பங்கீடு; மறு பக்கம்.. விருப்ப தொகுதிகள்: கூட்டணி கட்சிகள் நெருக்கடியால் தி.மு.க.வுக்கு சிக்கல்!





சென்னை, மார்ச். 21–

தமிழகத்தில் ஆளுங்கட்சியான தி.மு.க., நடைபெற உள்ள சட்டசபை தேர்தலில் வலுவான கூட்டணியை அமைத்துள்ளது. கடந்த (2021) சட்டசபை தேர்தலில் 13 கட்சிகளுடன் கூட்டணி அமைத்த தி.மு.க., இந்த முறை 26 கட்சிகளுடன் மெகா கூட்டணியை அமைத்துள்ளது. தற்போது, தி.மு.க. கூட்டணியில் தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தை நடந்து வரும் நிலையில், இதுவரை காங்கிரஸ் கட்சிக்கு 28, இந்திய கம்யூனிஸ்டு கட்சிக்கு 5, ம.தி.மு.க.வுக்கு 4, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிக்கு 2, மனிதநேய மக்கள் கட்சிக்கு 2, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சிக்கு 2 தொகுதிகள் என ஒதுக்கப்பட்டுள்ளன.

**தொகுதி பங்கீட்டில் தொடரும் சிக்கல்**

விடுதலை சிறுத்தைகள் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, மக்கள் நீதி மய்யம் ஆகிய கட்சிகளுடன் தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தை நடந்து வருகிறது. அவர்கள் கூடுதல் தொகுதிகள் கேட்பதால், தொகுதி பங்கீட்டில் தொடர்ந்து சிக்கல் நீடித்து வருகிறது.

இதனால், தி.மு.க. கூட்டணிக்கு புது வரவான தே.மு.தி.க.வுடன் இன்னும் தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தையை தொடங்க முடியாத நிலை நீடிக்கிறது. மேலும், கூட்டணியில் இடம்பெற்றுள்ள சிறிய கட்சிகளுக்கும் தொகுதிகள் ஒதுக்க வேண்டிய கட்டாயத்தில் தி.மு.க. இருக்கிறது.

**தி.மு.க.வில் நேர்காணல்**

இப்படி, ஒரு பக்கம் தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்க, மறுபக்கம் தொகுதி பங்கீட்டை முடித்த 6 கட்சிகளும், விருப்ப தொகுதிகள் பட்டியலுடன் வந்து நிற்பதால், தி.மு.க. தலைமை கடும் சிக்கலை சந்தித்து வருகிறது. இதற்கு மத்தியில், தி.மு.க. சார்பில் போட்டியிட விருப்ப மனு அளித்தவர்களிடம் முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் நேர்காணல் நடத்தி வருகிறார்.

தி.மு.க. கூட்டணியில், 28 தொகுதிகளை பெற்றுக்கொண்ட காங்கிரஸ் கட்சி 39 விருப்ப தொகுதிகளின் பெயர்கள் அடங்கிய பட்டியலை கொடுத்து, அதில் இருந்து 28 தொகுதிகளை ஒதுக்க கேட்கின்றது.

**காங்கிரஸ் கட்சி விரும்பும் தொகுதிகள் எவை?**

காங்கிரஸ் விருப்ப தொகுதிகள் பட்டியலில், கிள்ளியூர், விளவங்கோடு, ஸ்ரீவைகுண்டம், குளச்சல், பத்மநாபபுரம், விருதுநகர், ஆலங்குளம், காரைக்குடி, ராமநாதபுரம், தென்காசி, திருவாடனை, முதுகுளத்தூர், நாங்குநேரி, ஊத்தங்கரை, முசிறி, திருநெல்வேலி, மணப்பாறை, சோளிங்கர், சிதம்பரம், மொடக்குறிச்சி, திருப்பூர் தெற்கு, வேடசந்தூர், மதுரை மத்தி, கோவை தெற்கு, மதுராந்தகம், கலசப்பாக்கம், அறந்தாங்கி, பட்டுக்கோட்டை, மேட்டூர், வேளச்சேரி, அம்பத்தூர், எழும்பூர், பொன்னேரி, மயிலாடுதுறை, கூடலூர், கும்பகோணம், ஊட்டி, சிவகாசி, விருத்தாசலம் ஆகிய 39 தொகுதிகள் இடம்பெற்றுள்ளன.

இதேபோல், 5 தொகுதிகளை பெற்றுள்ள இந்திய கம்யூனிஸ்டு கட்சி 10 தொகுதிகள் அடங்கிய விருப்ப பட்டியலை வழங்கியுள்ளது. அதில், தளி, திருத்துறைப்பூண்டி, நாகப்பட்டினம், வால்பாறை, தொண்டாமுத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர், திருப்பூர், பவானிசாகர், பழனி, சிவகங்கை ஆகிய தொகுதிகள் இடம்பெற்றுள்ளன.

**ம.தி.மு.க.வின் 10 விருப்ப தொகுதிகள்**

தி.மு.க. கூட்டணியில் 4 தொகுதிகளை பெற்றுள்ள ம.தி.மு.க.வும் 10 தொகுதிகள் அடங்கிய விருப்ப பட்டியலை கொடுத்துள்ளது. அதில், மதுரை தெற்கு, திருச்சி கிழக்கு, மணப்பாறை, சாத்தூர், வேளச்சேரி, கோவில்பட்டி, கடலூர், புவனகிரி, திருநெல்வேலி, பாளையங்கோட்டை ஆகிய தொகுதிகள் இடம்பெற்றுள்ளன. அதேபோல், 2 தொகுதிகளை பெற்றுள்ள இந்திய யூனியன் முஸ்லிம் லீக், கடையநல்லூர், பாளையங்கோட்டை, பாபநாசம் ஆகிய 3 தொகுதிகள் அடங்கிய விருப்ப பட்டியலை கொடுத்துள்ளது.

**கொ.ம.தே.க. – ம.ம.க. நிலை என்ன?**

தி.மு.க. கூட்டணியில், 2 தொகுதிகள் பெற்றுள்ள கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி, திருச்செங்கோடு, பொள்ளாச்சி, மொடக்குறிச்சி ஆகிய 3 தொகுதிகளில் இருந்து 2–ஐ கேட்கிறது.

அதேபோல், 2 தொகுதிகளை பெற்றுள்ள மனிதநேய மக்கள் கட்சி, ராமநாதபுரம், திருவாடானை, ஆம்பூர், பாளையங்கோட்டை, நாகப்பட்டினம், பாபநாசம் ஆகிய 5 தொகுதிகளில் இருந்து 2–ஐ கேட்கிறது.

**தி.மு.க. தலைமைக்கு சிக்கல்**

இப்படி, தி.மு.க. கூட்டணியில் ஒரு பக்கம் தொகுதி பங்கீட்டில் சிக்கல் நீடித்து வரும் நிலையில், மற்றொரு பக்கம் தொகுதி பங்கீட்டை முடித்த கட்சிகள் விருப்பப்பட்டியலுடன் வந்து நிற்பதால், தி.மு.க. தலைமைக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இன்னொரு பக்கம், தி.மு.க.வில் வேட்பாளர் நேர்காணலும் நடந்து கொண்டிருப்பதால், அதில் பங்கேற்கும் நிர்வாகிகள், முதலில் நாம் கேட்கும் தொகுதி, நம்கட்சி (தி.மு.க.) வசம் இருக்குமா? என்ற சந்தேகத்துடனேயே வந்து செல்கின்றனர்.

## சரத்குமார் தனது ஆதரவாளர்களுடன் முக்கிய ஆலோசனை!



சென்னை, மார்ச். 21–

சரத்குமார் கடந்த 2024 மார்ச் மாதத்தில் சமத்துவ மக்கள் கட்சியை கலைத்து விட்டு பாஜகவுடன் தனது கட்சியை இணைத்து கொண்டு தொடர்ந்து பாஜகவில் இருந்து வருகிறார். இந்த நிலையில் பாஜகவின் மேலிடம் தொடர்ந்து அவருக்கு முக்கிய பொறுப்புகளை வழங்குவதாக தெரிவித்திருந்தது. அதேபோல சமத்துவ மக்கள் கட்சியில் இருந்து பாஜகவோடு இணைந்த நிர்வாகிகளுக்கும் முக்கிய பொறுப்புகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. சட்டமன்ற உறுப்பினர்கள், வேட்பாளர்கள் தேர்விலும் வாய்ப்புகள் வழங்கப்படும் என்று தெரிவித்த நிலையில் தற்போது வரைக்கும் எந்த உத்தரவாதமும் கொடுக்காத நிலையில் தேர்தல் நெருங்ககூடிய நிலையில் சரத்குமாரின் ஆதரா வாளர்கள் அதிருப்தியில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நாளை தி.நகரில் தனது ஆதரவாளர்களுடன் ஆலோசனை நடத்துகிறார், அதன்பின்பு செய்தியாளர்களை சந்திக்கிறார். குறிப்பாக பாஜகவில் இணைந்த முக்கிய நிர்வாகிகளுக்கு தேசிய அளவில் பொறுப்புகள் வழங்கப்படாமல் இருக்கிறது. அந்த வகையில் சரத்குமாருக்கும் பொறுப்பு வழங்கப்படாமல் இருக்கிறது. நாளை தனது ஆதரவாளர்களுடன் ஆலோசனைக்கு பின் செய்தியாளர்கள் சந்திப்பில் தனது நிலைப்பாடு குறித்து தெரிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## அனுமதியில்லாத வலைதள பதிவுகளுக்கு தடை: தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அதிரடி!



சென்னை, மார்ச். 21–

'சமூக வலைதளங்களில், ஒருவரின் அனுமதியின்றி, அவரது அடையாளம், குரல் அல்லது தோற்றத்தை தவறாக சித்தரிக்கும் மற்றும் வாக்காளர்களை திசை திருப்பக்கூடிய பதிவுகள், முற்றிலுமாக தடை செய்யப்பட்டு ள்ளன' என, தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்து ள்ளார். அவரது அறிக்கை: மின்னணு மற்றும் சமூக ஊடகங்களில், அரசியல் விளம்பரங்களை வெளியிட, அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள், மாநில அல்லது மாவட்ட அளவிலான, ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு குழுவிடம், முன் அனுமதி சான்றிதழ் பெற வேண்டும். இதற்கு, குறைந்தது மூன்று நாட்களுக்கு முன் விண்ணப்பிக்க வேண்டும்.

செயற்கை நுண்ணறிவு வாயிலாக உருவாக்கப்பட்ட அல்லது டிஜிட்டல் முறையில் மாற்றப்பட்ட, அனைத்து வீடியோக்களிலும், ஏ.ஐ., வாயிலாக உருவாக்கப்பட்டது, டிஜிட்டல் முறையில் மேம்படுத்தப்பட்டது, செயற்கை உள்ளடக்கம் போன்ற தெளிவான லேபிள்கள் இருக்க வேண்டும். ஒருவரின் அனுமதியின்றி, அவரது அடையாளம், குரல் அல்லது தோற்றத்தை தவறாக சித்தரிக்கும் மற்றும் வாக்காளர்களை திசை திருப்பக் கூடிய உள்ளடக்கங்கள், முற்றிலுமாக தடை செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு கூறினார்.

## தொகுதி பங்கீடு: அமித் ஷாவை சந்தித்து டி.டி.வி. தினகரன் பேச்சுவார்த்தை!



புதுடெல்லி, மார்ச். 21–

தொகுதிகளை முடிவு செய்வதற்காக அன்புமணி, டி.டி.வி. தினகரன் இருவரும் நேற்று காலை டெல்லி புறப்பட்டு சென்றனர்.

இந்நிலையில் டெல்லியில் உள்ள இல்லத்தில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் சந்தித்தார். என்.டி.ஏ. கூட்டணியில் உள்ள டி.டி.வி. தினகரன் தொகுதி பங்கீடு தொடர்பாக அமித் ஷாவுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

## எனக்கு வேலைகள் அதிகம் உள்ளன; விஜய் குறித்த கேள்வியால் கமல் கோபம்!



சென்னை, மார்ச். 21–

மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவரும் நடிகருமான கமல்ஹாசன் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

நாட்டின் நலனை கருத்தில் கொண்டு இந்தியா கூட்டணியில் தொடர்கிறேன். லாப நோக்கத்திற்காக கூட்டணியில் இல்லை. இந்தியா கூட்டணியில் இருப்பதை கடமையாக கருதுகிறேன். திமுகவுன் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

தமிழ்நாடு முழுவதும் திமுக கூட்டணிக்கு பிரசாரம் செய்வேன்'' என்றார். தவெக தலைவர் விஜய், பெரம்பூரில் போட்டியிட உள்ளதாக தகவல் வெளியாகி வருகிறதே அதை எப்படி பார்க்கிறீர்கள் என்று செய்தியாளர்கள் கமலிடம் கேட்டனர். இதற்கு பதிலளித்த கமல்ஹாசன், நான் ஏன் அதை பார்க்க வேண்டும். எனக்கு நிறைய வேலைகள் உள்ளன'' என்றார். மக்கள் நீதி மய்யத்தில் புதியவர்களுக்கு எப்போதுமே வாய்ப்புகள் இருக்கும்'' என்றார்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020